பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 01 2025 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. நாட்டில் உள்ள கிராமங்களில் வறுமை இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கான அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தில் நகரமயமாக்கல் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் மறுசீரமைக்கப்பட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது..
4. தமிழகத்தில் சிதிலமடைந்த நிலையில் உள்ள அரசு பள்ளிக் கட்டிடங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கேட்டுக் கொண்டுள்ளார்.,
5. சர்வதேச செஸ் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேசி நான்காவது இடத்திலும், குகேஷ் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் கடினமாக உழைத்து நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் பணியில் ஈடுபட்டு வரும் விவசாய சகோதர சகோதரிகளை நினைத்து பெருமிதம் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2025-ஆம் ஆண்டின் முதல் அமைச்சரவைக் கூட்டத்தில், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

நாட்டில் உள்ள கிராமங்களில் வறுமை இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கான அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தமது அமைச்சகம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

மாதாந்திர அடிப்படையில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு அதனை அடைவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

பிரதமரின் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 42 லட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அவற்றில் 32 லட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை நான்கு லட்சத்திற்கும் கூடுதலான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2024-25-ஆம் நிதி ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கில், நிலுவையில் உள்ள பத்து லட்சம் வீடுகளை கட்டுவதற்கான அனுமதி நடப்பு ஆண்டில் வழங்கப்படும் என்று திரு சிவராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

புதுதில்லியில் நடைபெறவுள்ள குடியரசுதின அணிவகுப்பு பேரணி மற்றும் படை வீரர்கள் பாசறை திரும்பும் நிகழ்ச்சிகளை பார்வையிடுவதற்கான அனுமதி சீட்டு விற்பனை இன்று தொடங்குகிறது.

இது தொடர்பாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த அனுமதி சீட்டுக்களை சேனா பவன், சாஸ்திரிபவன், ஜந்தர் மந்தர், பிரகதி மைதான் மற்றும் ராஜீவ் சௌக் மெட்ரோ ரயில் நிலையம் போன்ற இடங்களில் அசல் அடையாள அட்டைகளை காண்பித்து பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இந்த அனுமதி சீட்டுக்களை இதற்கான பிரத்யேக இணையதளம் மற்றும் மொபைல் செயலி வாயிலாகவும் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நகரமயமாக்கல் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் மறுசீரமைக்கப்பட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது..

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளின் எல்லைகள் விரிவாக்கம், புதிய நகராட்சிகள், பேரூராட்சிகளை அமைப்பது தொடர்பாக ஐந்து அரசாணைகள் வெளியிடப்பட்டள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி மற்றும் திட்டங்களை நிறைவேற்றுதல் உள்ளிட்ட பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை, திருச்சி உள்ளிட்ட 16 மாநகராட்சிகளுடன் நான்கு நகராட்சிகள், ஐந்து பேரூராட்சிகள் மற்றும் 149 ஊராட்சிகளை இணைப்பது தொடர்பான உரிய நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

நகரமயமாக்கல் நடவடிக்கையில் தமிழகம் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக திகழ்வதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் சிதிலமடைந்த நிலையில் உள்ள அரசு பள்ளிக் கட்டிடங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கேட்டுக் கொண்டுள்ளார்.,

சமூக வலைதளப்பதில் அவர் விடுத்துள்ள பதிவில், மாணவர் சமுதாயத்தின் கல்விக்காக தனியார் அமைப்புகளிடம் உதவி கேட்கும் நிலையில் மாநில அரசு உள்ளது கவலைக்குரியது என்று கூறியுள்ளார்.

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் பட்ஜெட்டில் 44 ஆயிரத்து 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும், ஒரு லட்சம் கோடி ரூபாய் வரை கடன் பெறும் நிலையில் இதற்கான நடவடிக்கைகள் எதையும் மாநில அரசு மேற்கொள்ளவில்லை என்று குற்றம்சாட்டியுள்ளார்.

சேதமடைந்த பத்தாயிரம் அரசு பள்ளிக் கட்டிடங்கள் புதிதாக கட்டப்படும் என்ற திமுக-வின் தேர்தல் வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று திரு அண்ணாலை தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் சரபங்கா நீரேற்று திட்டத்தின் கீழ் வறண்ட ஏரிகளை நிரப்பும் வகையில் திறந்துவிடப்பட்டுள்ளது.

மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன், அணையிலிருந்து நீரை திறந்துவிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேட்டூர் அணை ஒரே ஆண்டில் மூன்றாவது முறையாக நிரம்பி உள்ளதாகவும், கூடுதலாக வரும் தண்ணீர் அனல்மின் நிலையம் வழியாக மேட்டூர் சரபங்கா திட்டத்தில் உள்ள ஏரிகளை நிரப்பும் வகையில் திறந்து விடப்பட்டுள்ளதாகக் கூறினார்.

சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடி நிலத்தில் உள்ள 100 வறண்ட ஏரிகளை நிரப்பும் திட்டம் கடந்த 2019-ஆம் ஆண்டு 565 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக 57 ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் நிறைவு பெற்றுள்ளதாகவும் திரு ராஜேந்திரன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நாமக்கல்லில் நெகிழி பயன்பாட்டை ஒழிப்பது, பாரம்பரிய கலைகளை மீட்டெடுப்பது தொடர்பான விழிப்புணர்வு சிலம்பாட்டம் கலை நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பேசிய தனியார் சிலம்ப அறக்கட்டளை நிறுவனர் எஸ் ரம்யா, சிலம்பக்கலை ஆரோக்கிய வாழ்விற்கு உதவிடும் என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - ரம்யா ) -36---- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஓரிரு இடங்களில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடலின் தெற்குப் பகுதிகள், மாலத்தீவு பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் நாளையும், நாளை மறுநாளும் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சென்னையில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்றும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 டிகிரி செல்சியசாக இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

அமெரிக்காவில் உள்ள நியூ ஓரியான்ஸில் உள்ள பிரெஞ்ச் குடியிருப்புப் பகுதியில் மக்கள் கூட்டத்தில் மோதியதில் 15 பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

ருமேனியா, பல்கேரியா நாடுகள் ஐரோப்பிய யூனியனுடன் இணைந்துள்ளன.

[]<<<>>>[]

பிரபல பாடகரும், திரைப்பட நடிகருமான தில்ஜித் தோசாஞ்ச் பிரதமர் திரு நரேந்திரமோடி நேற்று சந்தித்து பேசினார்.

[]<<<>>>[]

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் தலைமை செயல் அதிகாரியாக திரு புவனேஷ்குமார் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

[]<<<>>>[]

மத்திய பிரதேச மாநிலம் போபாவில் விஷவாயு கசிவு சம்பவம் நேரிட்ட 40 ஆண்டுகளுக்குப் பிறகு அங்குள்ள யுனியன் கார்பைட் நிறுவனத்திலிருந்து 377 டன் கழிவுகளை அகற்றும் பணி தொடங்கியுள்ளது.

[]<<<>>>[]

கோவை மாநகர காவல்துறை ஆணையராக திரு சரவணா சுந்தர் நேற்று பதவியேற்றுக் கொண்டார்..

[]<<<>>>[]

சேலம் மாவட்டம் தாரமங்கலம் கைலாசநாதர் கோவிலில் உலக சாதனைக்கான பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மூன்று வயது முதல் 15 வயது வரையிலான 250 மாணவிகள் தாம்பலத் தட்டில் நடனமாடியபடி உலக சாதனை படைத்தனர்.

[]<<<>>>[]

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே விளைநிலங்களில் புகுந்து பயிர்களை நாசப்படுத்தி வரும் யானைக் கூட்டத்தை கட்டுப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

[]<<<>>>[]

திருச்செந்தூர் கடற்பகுதியில் எட்டு அடி ஆழத்திற்கு கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளதல் பக்தர்கள் பாதுகாப்பாக குளிக்கும் படி காவல்துறை அறிவுறுத்தியுள்ளது.

[]<<<>>>[]

சர்வதேச செஸ் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேசி நான்காவது இடத்திலும், குகேஷ் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

முன்னணி ஆட்டக்காரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

[]<<<>>>[]

இந்தூரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் யுவன்நந்தால், தட்ஷினேஸ்வர் சுரேஷ், தேவ்ஜாவியா, ஷிராக் துஹான், ஆர் என் ஷா, சித்தார்த் ராவத், விஷ்ணுவர்தன் ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

[]<<<>>>[]

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்கால் அணி இரண்டு — ஒன்று என்ற கோல் கணக்கில் குணசிகா அணியை வென்றது.

ரூர்கேலாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சூர்மா கிளப் அணி —உத்திரபிரதேச அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இன்று இரவு மணி 8-15-க்கு தொடங்குகிறது.

***End of News***